திரு. இரா. வில்வநாதன் அவர்கள் 2001 முதல் 2006 வரை சோளிங்கர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள். மேலும், 2–3–2002 முதல் 29–8–2002 வரை ஊரகத் தொழில் துறை அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

திரு. வி.எ. செல்லையா அவர்கள் 2001 முதல் 2006 வரை மருங்காபுரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

41—

பறவைகள் சரணாலயம்

***4673—திரு. மு. சக்ரபாணி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதி, எடச்சேரி கிராம கழுவெளியில் பறவைகள் சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2017 மார்ச் 20]

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆம். விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, எடச்சேரி கிராம கழுவெளியில் வன உயிரின பாதுகாப்புச் சட்டம் பிரிவு 18(1)—ன்கீழ் பறவைகள் சரணாலயம் அறிவிக்கை செய்ய மாண்புமிகு அம்மாவின் அரசு உரிய நடவடிக்கை எடுத்துவருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி அவர்கள்.*

திரு. மு. சக்ரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி, தங்கத் தாரகை மறைந்த முதலமைச்சர் அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன்.*

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, எடச்சேரி கிராம கழுவெளியில் பறவைகள் சரணாலயம் அமைக்க அறிவிக்கை செய்ய நடவடிக்கை எடுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசிற்கும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை வானூர் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானூர் தொகுதியில் உள்ள வானூர் ஒன்றியத்தில் எடச்சேரி, கொஞ்சுமங்கலம், காரட்டை போன்ற 23 ஊராட்சிகளின் நடுவில் சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் கழுவெளிப் பகுதியும், பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதியும் உள்ளன. இந்தப் பகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான காடுகளும் உள்ளன. இங்கு உள்நாட்டுப் பறவைகளும், வெளிநாடுகளில் இருந்துவரும் பறவைகளும் மழைக் காலங்களில் வந்து தஞ்சம் அடைகின்றன. இந்தப் பகுதியில் பறவைகள் சரணாலயம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்திருக்கும் இந்த நல்வேளையில், சரணாலயம் அமைப்பதில் தற்போதைய நிலை என்ன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்

வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல, கழுவெளி, விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதிக்குட்பட்ட மரக்காணம் வட்டாரத்தில் அமைந்துள்ள சதுப்பு நிலம், 196 சிறிய நீர்ப்பாசன குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் வடிகால் பகுதியாக இருந்து வருவதோடு, எண்ணிலடங்காத வெளிநாட்டுப் பறவைகளும், உள்நாட்டுப் பறவைகளும் வாழ்வதற்கு வசதியாக உள்ளதுடன், மீன் குஞ்சுகள் பொரித்துப் பெருகுவதற்கும் ஏதுவாக அமைந்துள்ளது. இந்தக் கழுவெளி ஈர நிலத்தின் மொத்தப் பரப்பளவான 74 சதுர கிலோ மீட்டரில் 4,722 எக்டேர் நிலப்பகுதியை தமிழ்நாடு வனச் சட்டம், 1882–ன் 26–வது பிரிவின்படி, ஏற்கெனவே பாதுகாக்கப்பட்ட நிலமாக அறிவிக்கை செய்யப்பட்டதோடு, மீதமுள்ள நிலத்தையும் மேற்படி வனச் சட்டப் பிரிவின்படி அறிவிக்கை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பகுதியில் உயிர்ப்பன்மை (bio–diversity)–ஐப் பாதுகாக்க ஏதுவாக, 2011 ஆம் ஆண்டு முதல் இதுவரை 193.58 இலட்சம் ரூபாய் செலவினம் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கழுவெளி ஈர நிலப் பகுதியை நில அளவை செய்து வருவாய்த் துறையினர், இயற்கை ஆர்வலர்கள், சுற்றுச்சூழல் அறிவியலாளர்கள், தன்னார்வ நிறுவனங்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்தாலோசித்து, வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம், பிரிவு 18 (1)–ன்கீழ் பறவைகள் சரணாலயமாகவும், ராம்சார் பகுதியாகவும் (wetlands for humanity) அறிவிக்கை செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இம்மாமன்றத்திற்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

2017 மார்ச் 20]

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குச் சிட்டுக் குருவிகள் தினம். பொதுவாக, தமிழகத்திலே ஒருகாலத்திலே கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் நீக்கமற நிறைந்திருந்த சிட்டுக் குருவிகள், இன்றைக்குப் பெருமளவில் அழிவுக்குள்ளாகியிருக்கின்றன. கிராமப்புறங்களில்கூட பார்த்தீர்களென்றால், சில இடங்களில் அவை இருக்கக்கூடும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கக்கூடிய திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில்கூட இப்போது சிட்டுக் குருவிகள் காணப்படுவதில்லை என்று இன்றைக்கு தினத்தந்தியில் ஒரு கட்டுரை வந்திருக்கிறது. ஆக, சிட்டுக் குருவி இனத்தை முற்றிலுமாகக் காப்பாற்றுவதற்கு, அவற்றை அழிவிலிருந்து மீட்பதற்கு ஏதேனும் செயற்குறிப்பு நம்முடைய அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதா என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டு பார்த்தீர்களென்று சொன்னால், நவம்பர் மாதத்தில் தொடங்கி, இப்போது ஏப்ரல் மாதம் முடியக்கூடிய பறவைகளின் வலசைக் காலத்தில்—குறிப்பாக, தமிழகத்தினுடைய தென் மாவட்டங்களுக்கு நிறைய பறவைகள் வலசையில் வந்திருக்கின்றன. எங்கள் ஊரிலேகூட கிழக்கு ஐரோப்பாவில் இருந்து வரக்கூடிய Rosy Starlings சோளக் குருவிப் பறவைகள் இந்த முறை அதிக அளவிலே பார்க்கப்பட்டிருக்கின்றன. Flemingos –பூ நாரைகள்; அவனியாபுரம் கண்மாயில் இந்த முறை அதிகமாக இருந்தன. குள்ளூர் சந்தை அணையிலே அதிகமாகக் காணப்பட்டன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தென் மாவட்டங்களிலே இருக்கக்கூடிய குள்ளூர் சந்தை, சங்கரபாண்டியபுரம், அவனியாபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள கண்மாய்களிலே பறவைகள் சரணாலயங்களை நம்முடைய வனத் துறையின் சார்பிலே உருவாக்கி, அவற்றைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, நான் தெரிவித்தவாறு சிட்டுக் குருவி இனங்களை முழுமையாகக் காப்பாற்றுவதற்கும், அதற்கான செயற்குறிப்பினை உருவாக்கிச் செயல்படுத்துவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையின் சார்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொண்டு, அதனை மேற்கொள்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் இங்கே ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். சிட்டுக் குருவிகள் எல்லாம் அழிந்து வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் சில பகுதிகளைக் குறிப்பிட்டு, அங்கெல்லாம் சரணாலயம் அமைக்க முடியுமா என்றும் கேட்டிருக்கிறார்கள். ஓர் இடத்தில் சரணாலயம் அமைக்க வேண்டுமெனில், வன உயிரினப் பாதுகாப்புச் சட்டப் பிரிவு 18 (1)—ன்கீழ்; அந்தப் பகுதி உகந்த பகுதியாக பாதுகாக்க வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இருக்க வேண்டும். அவ்வாறு தகுதியுடன் ஏதுவான பகுதியாக இருக்கிறது என்று மாநில அரசு கருதினால், வருவாய்த் துறையுடன் ஒருங்கிணைந்து, சுற்றுச்சூழல் வல்லுநர்கள் மற்றும் இயற்கை ஆர்வலர்களின் உரிய ஒப்புதலுடன், நிதி ஆதாரத்தின் அடிப்படையில் சரணாலயம் அமைப்பதற்கான கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும். அவர் குறிப்பிட்ட சிட்டுக் குருவிகள் பிரச்சினையும், அவற்றை எப்படி வளர்ப்பது, பாதுகாப்பது என்பது குறித்தும் வனத் துறை உரிய ஆய்வுகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதியிலுள்ள கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம் மிகவும் அழகான சரணாலயம் ஆகும். தற்போது அங்கு சாலை வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், அங்கு தண்ணீர் வரத்து குறைவாக இருக்கின்றது. எனவே, அங்குள்ள இடத்தைச் சரியான முறையில் ஆழப்படுத்தி, தண்ணீர் வசதியை ஏற்படுத்தி, அங்கு பறவைகள் வந்து செல்வதற்குரிய வசதியான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அங்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதால்,

2017 மார்ச் 20]

அவர்களுக்கு உதவிடும் வகையில், சுற்றிக்காட்டுவதற்கு ஏதுவாக, வழிகாட்டிகள் நியமிக்கப்படுவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார் அவர்கள், ஏற்கெனவே இந்த அவையில் பேசியபோது, தற்போது குறிப்பிட்ட பகுதிகள் குறித்தும் பேசியிருக்கின்றார்கள்; இப்பொழுதும் அதையே கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் எழுப்பிய வினாவிற்கு நான் அளித்த அதே பதிலை, இந்த வினாவிற்கும் சொல்ல வேண்டியிருக்கிறது. எனினும், நான் ஏற்கெனவே கூறியபடி, ஆய்வுகள் செய்து, நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார் அவர்களுடன் பேசி, அவரது கோரிக்கைகளை நல்லமுறையில் நிறைவேற்றித்தர இந்த அரசு ஆவன செய்யும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதியிலுள்ள பல நூறு ஏக்கர் நிலங்களில், கழிவு நீர் கலந்து, மாசு ஏற்பட்டு, சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன. எனவே, சதுப்பு நிலமான அந்த இடத்தில் நீர் ஆதாரத்தைப் பெருக்குகின்ற வகையில், மழைக் காலங்களில் பொழியும் மழை நீரைச் சேமித்து, பறவைகள் சரணாலயம் அமைத்துத் தர வேண்டும். மேலும், அந்த இடத்தில் எந்தவிதமான ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவண்ணமும் நடவடிக்கைகள் மேற்கொண்டு, மழைக் காலங்களில் பொழியும் மழை நீரைச் சேமித்து, மிகப்பெரிய அளவில் நீராதாரத்தை உருவாக்கி, பறவைகள் சரணாலயம் அமைத்திட இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முதலாவதாக, பறவைகள் சரணாலயம் அமைப்பது குறித்த வனத்துறை சம்பந்தமான கேள்வியை எழுப்பினார்; இரண்டாவதாக, குளம் வெட்டுதல் போன்ற நீராதாரத்தை உருவாக்குவது குறித்த, பொதுப் பணித் துறை சம்பந்தமான கேள்வியை எழுப்பி, இரண்டு துறைகள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை ஒன்றாக வைத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பகுதிக்காகச் செலவு செய்யப்பட்ட விவரங்கள் ஏற்கெனவே இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் தனியாகக் குறிப்புகளைப் பெற்று, நான் ஏற்கெனவே கூறிய பதிலில் குறிப்பிட்டதைப்போன்று, மேற்குறிப்பிட்ட பகுதியில் சரணாலயம் அமைப்பதற்குரிய சூழ்நிலைகள் இருக்குமேயானால், அவரது கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

42—

கொப்பரைக் கொள்முதல் நிலையம்

***1920—திரு. பெ. சுப்ரமணி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, மாரண்டஹள்ளி பகுதியில் கொப்பரைக் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒவ்வோராண்டும் இந்திய அரசு நிர்ணயிக்கும் ஆதரவு விலை மற்றும் வழிகாட்டுதல்களின்படி, தேசிய வேளாண் கூட்டுறவு